# செய்திக் குறிப்பு

**தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று, 2023 - ஜே.ஈ.ஈ. தேர்வுக்கு விண்ணப்பிக்கும் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு மட்டும் மதிப்பெண்களையோ தரநிலையோ பதிவு செய்வதிலிருந்து விலக்கு அளித்திருக்கிறது தேசிய தேர்வு முகமை**

சென்னை, 24 டிசம்பர் 2022: -

தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறை விடுத்த கோரிக்கையை அடுத்து, தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ள அறிவிப்பில் 2020-21 கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு முடித்த மாணவர்கள் இப்போது 2023 ஆம் ஆண்டு ஜே.ஈ.ஈ தேர்வுக்கு மதிப்பெண்களோ தரநிலையோ இல்லாமலேயே விண்ணப்பிக்கலாம் என தெரிவித்திருக்கிறது.

2020-21 கல்வியாண்டில், கொரோனா பெருந்தொற்றின் விளைவாக ஊரடங்கு நடைமுறையில் இருந்த காரணத்தால் தமிழ்நாட்டில் பத்தாம் வகுப்பு படித்த அனைவரும் தேர்வானதாக தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அப்போது அறிவித்தது. 'அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி' என்று சான்றிதழ் வழங்கப்பட்டது.

இப்போது, குறிப்பிட்ட அந்த மாணவர்கள் பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வுகளை 2023ல் எழுதவுள்ளனர். ஜே.ஈ.ஈ தேர்வுக்கு விண்ணப்பிக்கும்போது பத்தாம் வகுப்பு மதிப்பெண் அல்லது தரநிலை கேட்கப்பட்டது. தமிழ்நாட்டு மாணவர்கள் அதை பூர்த்தி செய்ய இயலாத நிலை இருந்து வந்தது. இதையடுத்து தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை தேசிய தேர்வு முகமைக்கு மதிப்பெண்களை அல்லது தரநிலையை பதிவு செய்வதில் இருந்து தமிழ்நாட்டு மாணவர்களுக்கு விலக்கு அளிக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தது.

தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ள அறிக்கையில் ஜே.ஈ.ஈ தேர்வுக்கு விண்ணப்பிப்பதில் மாணவர்களுக்கு ஏதேனும் சிரமங்கள் இருந்தால் 011-40759000/011-69227700 ஆகிய எண்களை தொடர்புகொள்ளலாம் அல்லது jeemain@nta.ac.in என்கிற மின்னஞ்சலிலும் தொடர்புகொள்ளலாம் என அறிவித்திருக்கிறது.

ஆணையர்

பள்ளிக் கல்வி